செ.வெ.எண்: 218 நாள்:31.03.2018

திருநெல்வேலி மாவட்டம் தென்காசி வட்டம் ஆய்க்குடி, கம்புளி வனப்பகுதியில் மரக்கன்றுகள் நடும் விழா மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம் ராஜலெட்சுமி அவர்கள் மரக்கன்றுகள் நடவு செய்து தொடங்கி வைத்தார்கள்.

*****************

திருநெல்வேலி மாவட்டம் தென்காசி வட்டம் பாட்டாக்குறிச்சி அருகில் உள்ள வனத்துறைக்கு சொந்தமான இடங்களில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சசர் புரட்சித் தலைலி அம்மா அவர்களின் 70 வது பிறந்த நாளை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 70 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் கீழ் இன்று (31.03.2018) மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி.வி.எம்.ராஜலெட்சுமி அவர்கள், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப அவர்கள் , தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.வசந்தி முருகேசன் அவர்கள் மரக்கன்றுகள் நடவு செய்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாட்டில் 70 இலட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் மற்றும் பாரத பிரதமர் அவர்களால் பிப்ரவரி 24அன்று சென்னையில் தொடங்கி வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இன்று திருநெல்வேலி மாவட்டத்தில் வனத்துறைக்கு ஒதுக்கப்பட்ட 24000 மரக்கன்றுகளில் முதற்கட்டமாக இன்று 70 மரக்கன்றுகள் பாட்டாக்குறிச்சி பகுதியில் உள்ள வனத்துறைக்கு சொந்தமான பகுதிகளில் இன்று தொடங்கி வைக்கப்பட்டது. மேலும் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வனத்துறைக்கு சொந்தமான இடங்களில் மரக்கன்றுகள் நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வனபாதுகாப்பு அலுவலர் திரு. சம்பத் இ.வ.ப., உதவி வன பாதுகாப்பு அலுவலர் தலைமையிடம் திரு.கௌதம் இ.வ.ப., உதவி வன பாதுகாப்பு அலுவலர் திருநெல்வேலி திரு.முத்தையா , கடையநல்லூர் வட்டாட்சியர் திரு.தங்கராஜ், கடையநல்லூர் வனச்சரக அலுவலர் திரு.ஆரோக்கிய சாமி, முக்கிய பிரமுகர்கள் திரு.கண்ணன்(எ) ராஜி , ஆவின் திரு.ரமேஷ் , திரு.கிருஷ்ண முரளி ராஜா , திரு.சுப்பையா பாண்டியன், திரு.ஆறுமுகம் உட்பட முக்கிய அலுவலர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி